


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் 17.12.2025 அன்று மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் 38 மாவட்ட கலந்தாய்வு கூட்டம் நிறைவு பெற்றதை தொடர்ந்து இஸ்லாமியர்களின் 42 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி தமிழ்நாடு அரசு ஹஜ் இல்லம் கட்ட 32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அடிக்கல் நாட்டியதையொட்டி சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் நஜிமுதீன் சந்தித்து நன்றி தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார். உடன் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் நாசர் உள்ளார்.




திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், கோ.கண்ணன், இரா.ராஜசேகர், ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஓ.ஜோதி, எஸ்.பன்னீர்செல்வம், ந.பாண்டுரங்கன், டி.ஏ.தட்சணாமூர்த்தி, க.லோகநாதன், ஜெயராணிரவி, க.சௌந்தரராசன், எதிரொலிமணியன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

# அஞ்சல் துறையின் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.24,915 கோடி!

## மக்களவையில் டி.ஆர்.பாலுவின் கேள்விக்கு – ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 19 –

அண்மைக் காலங்களில் இந்திய தபால் துறை வங்கி, இன்ஷ்யூரன்ஸ் போன்ற நிதிசேவை களில் கவனம் செலுத்துவதால் அஞசல் நிலையங்களின் எண்ணிக்கை குறை ந்துள்ளதா? அதன் பொருட்டு அலுவலர்கள் புதிய பணிகளுக்கு மடைமாற்றப்பட்டு அஞ்சல் சேவைகள் பாதிப்புக்குள்ளானதால் தபால் நிலையங்களின் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளதா?

சென்ற ஐந்தாண்டுகளில் நாடு முழுவதும் எத்தனை தபால் அலுவலகங்கள்மூடப்பட்டன ? எத்தனை புதிய அலுவலகங்கள் திறக்கப் பட்டன? நிதிச்சேவை களால் அஞ்சல்துறையின் வருவாய் மற்றும் லாபம் பெருகி உள்ளதா? அல்லது ,இழப்பு ஏற்பட்டுள்ளதா?பெருமளவிலான காலிப் பணியிடங்களால் தபால் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ள நிலையில்



அதனை சீர்செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? என அஞ்சல்துறையின் செயல்பாடுகள் பிரச்சினைகள் குறித்த பல்வேறு கேள்விகளை மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு , எம்.பி. எழுப்பி இருந்தார்.

**8565 கூடுதல் தபால் நிலையங்கள்!**

இதற்கு மக்களவையில் த பதிலளித்த ஒன்றிய அஞ்சல் துறை இணை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திர சேகர் சென்ற ஐந்து ஆண்டுகளில் 8565 புதிய தபால் நிலையங்கள் திறக்க பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சென்ற 2021 ஆம் ஆண்டில் 1லட்சத்து 56 ஆயிரத்து 434 ஆக இருந்த தபால் நிலையங்களின் எண்ணிக்கை 2025 ல் ஒரு லட்சத்து64 ஆயிரத்து 999 ஆக உயர்ந்துள்ளது.

சென்ற நிதி ஆண்டான 202425 ல் அஞ்சல் துறையின் மொத்த செலவு ரூ.37, 528 இருந்த நிலையில் மொத்த வருவாய் ரூ.12613 மட்டுமே. எனவே, வருவாய் பற்றாக்குறை ரூ.24915 ஆக அதிகரித்துள்ளது.

ஆனால், நிதிசார்ந்த சேவைகளை மேற்கொண்டதால் அஞ்சல் துறை செயல்பாடுகள் பாதிக்கப் படவில்லை எனவும் அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

## திருப்பூர் மாவட்டம் – பல்லடம் தொகுதியில்

# "வெல்லும் தமிழ் பெண்கள்" தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு!

## மாநில மகளிர் அணி – தொண்டர் அணி செயலாளர்கள் ஜெ. ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.ராணி அறிக்கை!

திருப்பூர், டிச. 19 –

மாநில மகளிர் அணி – தொண்டர் அணி செயலாளர்கள் ஜெ. ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி நாமக்கல் ப.ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பூர் மாவட்டம் பல்லடம் தொகுதியில் வரும் டிசம்பர் 29ஆம் தேதி மாலை 4 மணிக்கு "வெல்லும் தமிழ் பெண்கள் தி.மு.க. மகளிர் மாநாடு ஒன்றை லட்சம் மகளிர் திரளும் பிரம்மாண்ட மாநாடாக 10,000 வாக்கு சாவடியில் இருந்து ஒரு வாக்குச்சாவடிக்கு 15 மகளிர் என இலட்சக்கணக்கான மகளிர் கலந்து கொள்ளும் பிரம்மாண்ட மாநாட்டை நடத்திட அனுமதி வழங்கிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,

மகளிரணி மாநாட்டை தலைமையேற்று சிறப்பிக்க இருக்கின்ற கழகத் துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கும்,திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டை





பொறுப் பேற்று சிறப்பாக செயல்படுத்த இருக்கின்ற மேற்கு மண்டல பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும்,திமுக மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு, வலைதள குழு ஆலோசனை குழு சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த மாநாட்டை ஒருங்கிணைத்து செயல்படுத்த இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள்,மாவட்ட செயலாளர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி பார்வையாளர்கள் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, கழகநிர்வாகிகளுக்கும் எங்களுடைய நன்றிகள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டின் நவீன சிற்பி தமிழினத் தலைவர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசில் தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் எந்த கோரிக்கை வைக்காமலே 1.31 கோடி மகளிருக்கு கலைஞர் உரிமைத்தொகை, கட்டணம் இல்லா விடியல் பயணம், கல்வி கற்கும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம்,வேலை செல்லும் மகளிர்க்கு பாதுகாப்பான தோழி விடுதி, மக்களை தேடி மருத்துவம், பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம்,அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 50%,

இந்தியாவிலேயே அதிக அளவாக 43% வேலைக்கு போகும் பெண்களை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என இந்தியாவின் மற்ற மாநில பெண்கள் எல்லோரும் வியந்து பார்க்கும் வகையில் தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாடு பெண்களை தலை நிமிர்ந்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என "திராவிட மாடல் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லும் விதமாகவும் கழக அரசிற்கு பெருமை சேர்க்கும் வெல்லும் தமிழ் பெண்களாகவும் தி.மு.க. மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட கழக மாவட்டங்களில் உள்ள மகளிர்கள் மீண்டும் 2026 ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திட தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் அலைகடல் என ஆர்ப்பரித்து திரண்டு வாரீர்! மாநாட்டை வெற்றி பெற செய்வீர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

